**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53

(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.55/2023**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துப்பழனி(PW1) | | |
| Father's Name | சுப்பையா | Calling | |
| Village | பழங்கரை | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of March 2026** by Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:-**

10.06.2022 அன்றைய தினம் மாலை 5 மணி அளவில் என் மனைவி எனக்கு தொலைபேசி மூலமாக என் மகள் ஜாஸ்மிதாவுடன் கம்பெனியில் குழந்தையுடன் இருந்த போது குழந்தை விளையாண்டு கொண்டிருந்தது தற்போது குழந்தை காணவில்லை என்று என்னிடம் தகவல் தெரிவித்தார் அதன் பின்னிட்டு நான் அக்கம் பக்கத்தில் தேடி விட்டு ஹைவே ரோட்டில் தேடிவிட்டு அங்கிருந்த ஹைவே பெட்ரோல் போலீஸ் இடம் என் மகள் காணவில்லை என்று தகவல் சொன்னேன். அதன் பின்பு நான் காவல் நிலையம் சென்று என் குழந்தையை காணவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த சமயம் எனக்கு என் மனைவி போன் செய்து குழந்தை கம்பெனிக்கு அருகே உள்ள தண்ணீர் தொட்டியில் விழுந்து மயக்க நிலையில் இருப்பதாக போன் மூலம் தகவல் சொன்னார். அங்கிருந்து என் குழந்தையை அவிநாசி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதாக தகவல் சொன்னார்கள் நானும் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன் மருத்துவர் என் குழந்தையை பரிசோதித்து விட்டு என் குழந்தை இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள் அன்றைய தினம் இரவு சுமார் 8 மணி அளவில் என் குழந்தை தண்ணி தொட்டியை சரியாக பராமரிக்காததால் அதில் விழுந்து குழந்தை இறந்து விட்டது என்று புகார் கொடுத்திருந்தேன் அடுத்த நாளும் காவல் நிலையம் வந்து காவல்நிலையத்தில் வைத்துகையொப்பம் செய்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார்(அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

என் மனைவி பெருமாள் கார்மெண்ட்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறார். சுமார் ஒன்றரை வருடங்களாக அங்கு வேலை செய்கிறார் . என் தாயார் வீட்டிலிருக்கும்போது என் குழந்தையை அவர் பார்த்துக் கொள்வார் அவர் இல்லாத சமயத்தில் என் மனைவியுடன்

கம்பெனிக்கு சென்று அங்கு என் மனைவி பார்த்துக் கொள்வார். குழந்தையை பாதுகாத்து பராமரிக்க வேண்டியது தாயின் கடமை என்றால் சரிதான். அந்த கம்பெனியில் சிசி டிவி கேமரா இல்லை. என் மனைவியே கம்பெனிக்கு இருசக்கர வாகனத்தில் ஓட்டிக்கொண்டு வந்து திரும்பி வந்து விடுவார் குழந்தையையும் அவரே வைத்து ஓட்டி செல்வார். கம்பெனிக்கு அருகே கட்டிட வேலை நடைபெற்று வருகிறது என்ற விபரம் என் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். கம்பெனி இருக்கும் இடத்தில் இருந்து கட்டிட வேலை நடைபெற்ற இடம் சுமார் 150 அடி முதல் 200 அடி வரைஇருக்கும் என்றால் சரிதான். என் மனைவி பணி புரியும் கம்பெனியில் மற்ற குழந்தைகளும் அங்கு வந்து இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி அன்று என் குழந்தையுடன் சுமார் 4–5 குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு 5 மணிக்கு சென்று விட்டேன் போலீசார் அங்கு 5.30 மணி அளவில் வந்தார்கள்.போலீசார் சம்பவ இடத்தில் வீடியோ பதிவு செய்தார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் சம்பவ இடத்தை சம்பவ தேதி அன்று சென்று பார்த்தேன் என்றால் இல்லை மறுநாள் காலையில தான் சென்று பார்த்தேன்.நான் காவல் நிலையத்திற்கு சுமார் 5. 20 மணியளவிற்கு சென்றேன். என்னுடன் காவல் நிலையத்திற்கு பட்டியல் சாட்சிகள் அனைவரும் வந்திருந்தார்கள். மேற்படி அவர்களிடம் காவல்துறையினர் கையொப்பம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள் .என் குழந்தை காணாமல் போன விபரம் எப்போது தெரியவந்தது என்றால் சுமார் 4 மணி முதல் 4.30 மணிக்குள் தெரியவந்தது.என் மகள் காணாமல் போன விபரம் என் மனைவிக்கு உடனே தெரிந்ததா என்றால் இல்லை என் மகள் எப்பவும் போல் மற்ற குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பாள் என்று நினைத்திருந்தார். என் மனைவியின் கவனமின்மையாலும் அஜாக்கிரதையாலும் தான் என் குழந்தை கம்பெனி விட்டு வெளியே வந்துள்ளது வந்துள்ளது குழந்தையை சரியாக பராமரித்து இருந்தால் இந்த சம்பவம் நடந்திருக்காது என்றால் சரியல்ல தண்ணீர் தொட்டி சரியாக மூடப்பட்டிருந்தால் என் குழந்தைக்கு எதுவும் நடந்திருக்காது என் குழந்தை எவ்வளவு தூரம் சென்று இருந்தாலும் அது பத்திரமாக மீண்டும் திரும்ப வந்திருக்கும். 3 வயது குழந்தைக்கு அறியாப் பருவம் என்றால் பேச்சுத் திறமை உள்ள குழந்தை ஆட்களை சரியாக அடையாளம் காண்பிக்கும். வீடு கட்டும் போது தண்ணீர் தொட்டியை சல்லடையை(weld mess) வைத்து மூடி வைத்திருப்பார்கள் என்றால் மேற்படி தொட்டியை எது வைத்தும் மூடி வைக்கவில்லை.சம்பவம் நடந்த மூன்றாவது நாள் தான் மேற்படி தொட்டி மணல் ஜலிக்கும் சல்லடையை வைத்தும் அங்கு இருக்கும் கட்டைகளை வைத்து சுமாராக மூடப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N. Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |